# பாவம், சுவிஷேசம், மற்றும் கட்டளைகள்



பாடம் 9 மே 30, 2026



"நான் ஒருபோதும் உம்முடைய கட்டளைகளை மறக்கமாட்டேன்; அவைகளால் நீர் என்னை உயிர்ப்பித்தீர். நான் உம்முடையவன், என்னை இரட்சியும்; உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன்."


(சங்கீதம் 119:93, 94)

நாம் ஏற்றுக்கொள்கிறோமோ இல்லையோ, பாவமே நம்மெல்லாரையும் பாதிக்கக்கூடிய பிரச்சனையாகவும், தேவனோடுள்ள உறவை அழிப்பதாகவும் இருக்கிறது: “எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,” (ரோ. 3:23).




நமக்கும் தேவனுக்கும் நடுவாக பாவம் உருவாக்கிய இடைவெளியை சீர்செய்வது எப்படி? சிலர் இந்த பிரச்சனைக்கு இரண்டு முக்கிய தீர்வுகளை கொடுக்கின்றனர்: நியாயப்பிரமாணம் மாத்திரமே (கிரியையினால் இரட்சிப்பு, நியாயப்பிரமாணத்தின் செயல்பாடுகளில் தவறான புரிந்துகொள்ளுதல்); அல்லது சுவிஷேசம் மாத்திரமே (விசுவாசத்தினால் இரட்சிப்பு, நியாயப்பிரமாணத்தை ஒழித்தல்).

சரியாக புரிந்துகொண்டால், நியாயப்பிரமாணமும் சுவிஷேசமும் ஒவ்வாதவைகள்; ஆனால், பாவத்திற்கான நமது போராட்டத்தில் அவை இரண்டும் இணைந்து போராடுகின்றன. அவைகளுக்கென்று செயல்பாடுகள் உள்ளன.



- சோதனைகளை தவிர்த்தல்
- பாவத்தை தவிர்ப்பதற்கான குறிப்புகள்

**பாவம்**



- நியாயப்பிரமாணமும் பாவமும்

**நியாயப்பிரமாணம்**



- சுவிஷேசமும் பாவமும்
- கன்மலையில் கட்டப்படுதல்

**சுவிஷேசம்**



# பாவம்



# சோதனையை தவிர்த்தல்


"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்." (யாக்கோபு 1:14)



சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார் யாக்கோபு (யாக் 1:12). சோதனை தேவனிடத்திலிருந்து வருவதில்லை என்பதையும் (யாக் 1:13), நம்முடைய சொந்த தீய ஆசைகளாலேயே அவைகள் எழுகிறது என்றும் அவர் அறிவுறுத்துகிறார் (யாக் 1:14).

சோதனைக்காரன் ஒருவனைக் குறித்து பவுல் பேசுகிறார்(1 தெச 3:5), அவனை சாத்தான் என்று இயேசு அடையாளப்படுத்துகிறார் (மத் 4:3, 10). நம்முடைய பலவீனங்களை எப்படி பாவத்துக்கு நேராக வழிநடத்த முடியும் என்பதை நன்கு அறிந்தவன் அவன். கிறிஸ்துவிற்கும் சாத்தானுக்கும் நடக்கும் பிரபஞ்ச போரில் நாம் முழ்கியிருக்கிறோம் என்பதையும், நம்மை கிறிஸ்துவிடமிருந்து திசைதிருப்ப அந்த சோதனைக்காரன் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்வான் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.







இவை தேவனுடைய சித்தத்திற்கு முரணாணவை என்று தெரிந்திருந்தும், தன் உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, சோதனைகளுக்கு இணங்கிவிடும் ஒருவருக்கு சிம்சோன் ஒரு தெளிவான உதாரணமாக திகழ்கிறார் (நியாய 14:1-3; 16:1, 4).

சோதனையை எப்படி தவிர்ப்பது? தேவனை தேடுதல் (மத். 6:33); தேவனோடு தனியாக நேரம் செலவிடுதல் (மாற். 14:38); விசுவாசத்தின் கேடயத்தை எடுத்துக்கொள்ளுதல் (எபே. 6:16).

# பாவத்தை தவிர்ப்பதற்கான குறிப்புகள்

"உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு; நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும்.." (மாற்கு 9:47)

பாவத்தை தவிர்ப்பதற்கான தெளிவான அறிவுரைகளை வழங்கியுள்ளார் இயேசு:



பாவத்திற்கு வழிநடத்தக்கூடிய செயல்களை செய்வதை தவிர்க்க வேண்டும்(மாற்கு 9:43; யோபு 23:12). உதாரணமாக, மதுபானம் வாங்குதல்.

பாவம் செய்யக்கூடிய இடங்களுக்கு செல்வதை நாம் தவிர்க்க வேண்டும் (மாற் 9:45; யோபு 23:11). உதாரணமாக, இரவு நேர விடுதிகளுக்கு செல்வது.

பாவத்திற்கு வழிநடத்தக்கூடியவைகளை பார்ப்பதை தவிர்க்க வேண்டும்(மாற்கு 9:47; யோபு 31:1). உதாரணமாக, திரைப்படங்களை பார்த்தல்.



சுருக்கமாக சொன்னால், பாவம் செய்வதையும், பாவம் செய்ய தூண்டப்படுவதையும் தவரகக உஙகளால இயனற அனைத்தையும் செய்யுங்கள். அதைக் குறித்து ஜெபியுங்கள்.

1. நீங்கள் தன்னிறைவு பெற்றவர் என்று நினைக்காதீர்கள் (1 கொரி. 10:12)
2. நீங்கள் எவ்வளவு சிறந்தவர் என்பதை எல்லோரிடமும் சொல்வதை நிறுத்திவிட்டு, இயேசுவை போல தாழ்மையுடன் இருங்கள் (மத். 6:2)
3. உங்கள் இதயத்திலிருந்து காமத்தை வேரறுக்க, எது அவசியமோ அதை செய்யுங்கள் (மத். 5:28-29)
4. மற்றவர்களை விமர்சிப்பதையும் மதிப்பிடுவதையும் நிறுத்துங்கள் (1 கொரி. 4:5)
5. உங்கள் எதிரிகளை வெறுக்காதீர்கள், மாறாக அவர்களுக்காக ஜெபியுங்கள் (மத். 5:44)
6. உங்களை சுற்றி இருப்பவர்கள் மீது கோபப்படுவதை நிறுத்துங்கள் (மத். 5:22)



לא תרצח
לא תנאף
לא תגנב
לא תענה
לא תחמד
אנכי ה׳
לא יהיה
לא תשא
זכור את
כבד את


# நியாயப்பி ரமாணம்

# நியாயப்பிரமாணமும் பாவமும்


"பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்;
நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்." (1 யோவான் 3:4)





நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதன் மூலம் தங்கள் பாவங்களை நிவிர்த்தி செய்துகொள்ள முடியும் என்று கருதும் சிலரால், நியாயப்பிரமாணத்திற்கும் பாவத்திற்கும் இடையிலான உறவு தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது(கலா . 5:4). இந்த கருத்து மற்றவர்களை நேர்மாறான ஒரு தீவிரத்துக்கு வழிநடத்தியுள்ளது – அதாவது, நியாயப்பிரமாணம் ஒழிந்துபோய்விட்டது என்பதே அது.

மீட்பை அடைவதற்கான ஒரு வழியாகவோ அல்லது அதற்கு தடையாகவோ – எப்படியாயினும், நியாயப்பிரமாணம் மீட்போடு தொடர்புடையது என்று கருதியதே இங்குள்ள பிரச்சனையாகும். ஆனால், நியாயப்பிரமாணத்தின் செயல்பாடு ஒருபோதும் மீட்பளிப்பதாக இருந்ததில்லை. அப்படியானால், அதன் செயல்பாடுதான் என்ன?





நியாயப்பிரமாணம் பாவத்தை நமக்கு உணர்த்தும் (1 யோவான் 3:4). நியாயப்பிரமாணம் இல்லையென்றால் பாவம் இன்னதென்று நாம் அறியாதிருப்போம் (ரோ 7:7) மற்றும், நாம் ஒரு தீர்வை தேடமாட்டோம் (கலா 3:24).

நியாயப்பிரமாணம் ஒரு சுமையாக இருப்பதற்கு மாறாக, பாவத்தின் பயங்கரமான விளைவுகளை நாம் அனுபவிக்காதவாறு தடுக்கும் ஒரு பாதுகாப்பு வேலியாக திகழ்கிறது (1 யோவான் 5:3; சங்கீதம் 1:1-3).



# சுவிஷேசம்



# சுவிஷேசமும் நியாயப்பிரமாணமும்

"ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்." (ரோமர் 3:28)



நம்முடைய இரட்சிப்பு (பாவமன்னிப்பும் நித்திய ஜீவனும்) இயேசு நமக்காக சிலுவையில் செய்த கிரியையின் மூலமாக பெறப்படுகிறது (கலா. 3:13). இதற்காகவே நம்மை இயேசுவை நேசிக்க தூண்டுகிறது இது (1 யோவான் 4:9, 19). மேலும் அவருடைய கட்டளைகளை கைகொள்வதன் மூலமே நாம் இந்த அன்பை வெளிப்படுத்துகிறோம் (யோவான் 14:15).

நியாயப்பிரமாணத்திற்கும் சுவிஷேசத்திற்கும் (அதாவது, இயேசுவின் இரத்தத்தின் மூலம் கிடைக்கும் இரட்சிப்பிற்கும்) இடையிலான உறவை இப்பொழுது நாம் ஆராய்வோம்:

- நியாயப்பிரமாணம் பாவத்தை வரையறுக்கிறது
- நாம் பாவம் செய்யும் போது, நித்திய மரணத்திற்குள் நாம் கண்டிக்கப் படுகிறோம்
- நம் பாவத்தை மன்னிப்பதற்கு நியாயப்பிரமாணத்திற்கு அதிகாரம் இல்லை
- இயேசு நம்முடைய பாவங்களுக்கு பரிகாரமாக நித்திய மரணத்தை சகித்தார்
- நாம் இயேசுவின் பலியை ஏற்றுக்கொள்ளும் போது, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன
- மன்னிக்கப்பட்டவுடன், நாம் மீண்டும் பாவம் செய்யாமல் இருக்க நியாயப்பிரமாணத்தை கைகொள்கிறோம் (1 யோவான் 2:1)

இயேசு நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட ஒரு போதும் கருதவில்லை: மாறாக, அதை உறுதிப்படுத்தவே கருதினார் (மத். 5:17). நியாயப்பிரமாணமும் சுவிஷேசமும் தேவனுடைய உள்ளார்ந்த குணாதிசயத்தின் பிரதிபலிப்புகளாகவே விளங்குகின்றன: அன்பு.

# கன்மலையில் கட்டப்படுதல்


"ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு. இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்." (மத்தேயு 7:24)



சுவிஷேசத்தை ஏற்றுக்கொள்வது ஒரு செயல்முறையை பின்பற்றுவதை உள்ளடக்கியது. அதன் முதல்படி அறிவாகும். நம்மை மீட்கக்கூடிய ஒருவர் இருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும் (ரோ. 10:14).

ஆனால் அறிவு மட்டும் நம்மை இரட்சிக்காது. இரட்சிப்பைப் பற்றிய அறிவை பெற்றுக்கொண்ட பிறகும், சுவிஷேசத்தின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தாதவர்களை, மணலின் மீது தன் வீட்டைக் கட்டிய ஒருவருக்கு இயேசு ஒப்பிட்டார் "அது விழுந்து முழுவதும் அழிந்தது" (மத். 7:26-27).





அறிவுடன் உறுதியான செயல்முறைகளும் இணைந்திருக்க வேண்டும் (மத். 7:24-25). நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இல்லாமலேயே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோ. 3:28), ஆனால் இந்த செயல்கள் நமது இரட்சிப்பின் விளைவாகவே நமது வாழ்வில் காணப்படுவது அவசியமாகும் (மத். 7:18-21). நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவருடைய கட்டளைகளை கைக்கொண்டு, அவருடன் நெருங்கிய உறவில் வாழும்போது, நாம் பாறையின் மீது வீடு கட்டுகிறவர்களாக இருக்கிறோம்.

“நியாயப்பிரமாணம் மனிதனுக்கு அவனது பாவங்களை வெளிப்படுத்துகிறது; ஆனால், அதற்கான பரிகாரம் எதையும் அது அளிப்பதில்லை. கீழ்ப்படிபவர்களுக்கு அது வாழ்வை வாக்களித்தாலும், மீறுபவர்களுக்கு மரணமே பங்காகும் என்று அது அறிவிக்கிறது. கிறிஸ்துவின் நற்செய்தியால் மட்டுமே, பாவத்தினால் வரும் தண்டனையிலிருந்தோ அல்லது அதன் கறைபடிந்த நிலையிலிருந்தோ மனிதனை விடுவிக்க இயலும். எவருடைய நியாயப்பிரமாணத்தை அவன் மீறினானோ, அந்தத் தேவன்மீது அவன் மனந்திரும்புதலைச் செலுத்த வேண்டும்; அத்துடன், தனக்காகப் பாவநிவாரணப் பலியான கிறிஸ்துமீது விசுவாசம் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், அவன் "கடந்தகாலப் பாவங்களின் மன்னிப்பைப்" பெற்று, தெய்வீகச் சுபாவத்தில் பங்குள்ளவனாக மாறுகிறான்.”

எலன் ஜி உவைட் (மாபெரும் ஆன்மீக போராட்டம், பக். 467)